இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 17-06-2025

# தமிழ்நாட்டு நிதியில் ஒன்றிய அரசின் திட்டங்கள்!

ஒன்றிய அரசின் மீது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வைத்த விமர்சனம் சரியானதுதான் என்பதை 'இந்து' ஆங்கில நாளேடு உறுதி செய்துள்ளது.

"ஒன்றிய அரசு தரும் நிதியை தமிழ்நாடு அரசு தனது திட்டங்களுக்கு மடைமாற்றம் செய்து கொண்டிருக்கிறது" என்று ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா அவர்கள் சொல்லி இருந்தார்கள். இது எந்தளவுக்கு பொய்யான குற்றச்சாட்டு என்பதை விளக்கமாகச் சொல்லி இருந்தார் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்.

**"ஒன்றிய பா.ஜ.க. அரசு, தமிழ்நாட்டுக்கான எந்தப் புதிய சிறப்புத் திட்டத்தையும் தரவில்லை. அவர்கள் மிகச் சில திட்டங்களுக்கு ஒதுக்கும் பணமும் முழுமையாக இல்லை. அதில் கூடுதல் பணம் போட்டு மாநில அரசுதான் அந்த திட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டு இருக்கிறது. குடிநீர் திட்டமாக இருந்தாலும்- வீடுகட்டும் திட்டமாக இருந்தாலும் - ஒன்றிய அரசு ஒதுக்கும் பணத்தை வைத்து செயல்படுத்த முடியாது என்பதால் மாநில அரசுதான் கூடுதல் பணம் கொடுக்கிறது. சில திட்டங்களுக்கு ஒன்றிய அரசு ஒதுக்கும் பணத்தை விட மாநில அரசு ஒதுக்கீடு செய்யும் தொகை அதிகம். 'படையப்பா படத்தில் ரஜினி - செந்தில் காமெடி பார்த்திருப்பீங்க... 'மாப்பிள்ளை அவர்தான் ஆனா சட்டை என்னுது' - என்பார் ரஜினி. அது போலத்தான் ஒன்றிய அரசு பெயரிலான திட்டத்துக்கும் நிதி கொடுத்து வருகிறோம். ஆனால் அப்படியே பிளேட்டை திருப்பிப் போடுகிறார் உள்துறை அமைச்சர்"** என்று உண்மையை வெளிச்சம் போட்டுச் சொல்லி இருந்தார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

பிரதமர் வீடு வழங்கும் திட்டம் (PMAY), பிரதமர் மீன்வளத் திட்டம் (PMMSY), உயிர்நீர் (Jaljeevan) எனப் பிரதமரின் பெயரையும் ஸ்டிக்கரில் பிரதமரின் முகத்தையும் தாங்கிச் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கெல்லாம் அவர்களைக் காட்டிலும் அதிகமாக தமிழ்நாடு அரசுதான் நிதி ஒதுக்கீடு செய்கிறது என்பதை 'இந்து' ஆங்கில நாளேடு அம்பலப்படுத்தி இருக்கிறது. ஒன்றிய அரசின் 6 திட்டங்களை செயல்படுத்துவதில் தமிழ்நாடு அரசின் பங்கு கூடுதலாக உள்ளது என்று அந்தக் கட்டுரையில் சொல்லப்பட்டுள்ளது.

*** ஜல் ஜீவன் திட்டத்தில், ஒன்றிய மற்றும் மாநில அரசுகள் சமமாக செலவுகளை பகிர்ந்து கொள்ளும் என அறிவிக்கப்பட்டது. ஆனால், இதனை செயல்படுத்தும் போது, மாநில அரசின் பங்களிப்பு 55 சதவீதமாக உள்ளது.**

*** முதியோர் மற்றும் கைம்பெண் ஓய்வூதியத் திட்டங்களுக்கு 79 வயது வரை உள்ளவர்களுக்கு ஒன்றிய அரசின் பங்கு 300 ரூபாயாகவும், 80 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு 500 ரூபாயாகவும் உள்ளது. ஆனால், இத்திட்டப் பயனாளிகளுக்கு ஆயிரத்து 200 ரூபாயை மாநில அரசு வழங்கி வருகிறது.**

*** தமிழ்நாடு அரசு மாற்றுத்திறனாளிகளுக்கான தனது திட்டத்தின் கீழ், பயனாளிகளுக்கு ஆயிரத்து 500 ரூபாயை ஒவ்வொரு மாதமும் வழங்கி வருகிறது.**

*** பிரதமர் நகர்ப்புற வீடு கட்டும் திட்டத்தில் ஒரு வீட்டுக்கு மாநில அரசு செலவிடும் மொத்த தொகை 2 லட்சத்து 83 ஆயிரத்து 900 ரூபாய் ஆக உள்ளது. இதில், ஒன்றிய அரசின் பங்கு 60 சதவீதம் என அறிவிக்கப்பட்ட நிலையில், ஒன்றிய அரசு 50 சதவீதத்திற்கும் குறைவாகவே நிதி அளிக்கிறது.**

*** 100 நாள் வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் மற்றும் ஸ்வச் பாரத் மிஷன் எனும் கழிப்பறை கட்டுவதற்கான திட்டங்களுக்கு கடந்த நிதியாண்டில் ஒன்றிய அரசின் பங்களிப்பு 39 சதவீதமாகவும், மாநில அரசின் பங்களிப்பு 61 சதவீதமாகவும் இருக்கிறது.**

*** பிரதமர் பெயரில் உள்ள மீனவர்கள் மற்றும் மீன்பிடித் தொழிலாளர்களுக்கான திட்டத்தில் ஒன்றிய அரசின் பங்கு 60 சதவீதம் என அறிவிக்கப்பட்டது. ஆனால், இத்திட்டத்தில், ஒன்றிய அரசின் பங்கு 27 சதவீதமாகவும் மாநில அரசின் பங்கு 73 சதவீதமாகவும் உள்ளது.**

- இதுதான் 'இந்து' நாளேடே உறுதிப்படுத்திய உண்மைகள் ஆகும். ஜல்ஜீவன் திட்டத்துக்கு தமிழ்நாடு அரசின் நிதி 55 விழுக்காடு தரப்படுகிறது. பிரதமர் நகர்ப்புற வீடு கட்டும் திட்டத்துக்கு தமிழ்நாடு அரசின் நிதி 50 விழுக்காட்டுக்கு மேல் தரப்படுகிறது. 100 நாள் வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் மற்றும் ஸ்வச் பாரத் மிஷன் எனும் கழிப்பறை கட்டும் திட்டங்களுக்கு தமிழ்நாடு அரசின் நிதி 61 விழுக்காடு தரப்படுகிறது.

பிரதமர் பெயரில் உள்ள மீனவர்கள் மற்றும் மீன்பிடித் தொழிலாளர்களுக்கான திட்டத்துக்கு தமிழ்நாடு அரசு 73 விழுக்காடு நிதி தருகிறது. திட்டம் அவர்களுடையது, நிதி தமிழ்நாடு அரசினுடையது. இதை வைத்துத்தான், 'மாப்பிள்ளை அவருதான், சட்டை என்னுடையது' என்கிறார் முதலமைச்சர் அவர்கள்.

தமிழ்நாட்டுக்கு தர வேண்டிய நிதியைத் தருகிறார்களா என்றால் அதுவும் இல்லை. ஒருங்கிணைந்த கல்வி இயக்கத்தின் கீழ், ஒன்றிய அரசிடமிருந்து வரப்பெற வேண்டிய 2,152 கோடி ரூபாய் நிலுவையிலேயே உள்ளது. இது மாநில அரசின் நிதிச்சுமையாக மாறிவிட்டது. தேசிய உயர்கல்வி இயக்கத்தின் (RUSA) கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்களின்மீதும் புதிய கல்விக் கொள்கையை ஒன்றிய அரசுதிணிப்பதால், ஏற்பட்ட விளைவு இது.

ஃபெஞ்சல் புயலானது ஏற்படுத்தியுள்ள பேரழிவுகளைக் குறிப்பிட்டு, தற்காலிக மற்றும் நிரந்தர நிவாரணம் மற்றும் மீட்புப் பணிகளுக்கு 6,675 கோடி ரூபாய் தேவைப்படும் என கேட்கப்பட்டது. நிதி வரவில்லை.

மிக்ஜாம் புயல் தாக்கியது. அதற்குக் கேட்ட நிவாரணமும் வரவில்லை. தமிழ்நாட்டில் ஏற்பட்ட மூன்று இயற்கைப் பேரிடருக்கு மாநில அரசு கோரிய 37,906 கோடி ரூபாயில் ஒருசதவீதம்கூட இதுவரை தரப்படவில்லை.

**நமக்கு வரவேண்டியதும் வரவில்லை. அவர்கள் தர வேண்டியதும் தரவில்லை. இதுதான் ஒன்றிய அரசின் வஞ்சக ஆட்சிக்கு சாட்சியங்கள் ஆகும்.**



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.6.2025) தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் வட்டம், கல்லணையிலிருந்து காவிரி டெல்டா விவசாயிகளின் நலன் கருதி, குறுவை சாகுபடிக்காக தண்ணீரை திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ். ரகுபதி, போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர், உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி.செழியன், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ. வீ. மெய்யநாதன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, கல்யாணசுந்தரம், எஸ். முரசொலி, செல்வி ஆர். சுதா, தில்லி சிறப்புப் பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், சட்டமன்ற உறுப்பினர்கள், நீர்வளத்துறை அரசு செயலாளர் ஜெ.ஜெயகாந்தன், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் திருமதி பிரியங்கா பங்கஜம், வ. மோகனச்சந்திரன், மா.பிரதீப் குமார், ஹெச்.எஸ். ஸ்ரீகாந்த், ப.ஆகாஷ், திருமதி மு.அருணா, நீர்வளத்துறை முதன்மை தலைமைப்பொறியாளர் (ம) தலைமைப் பொறியாளர், பொது ச.ரமேஷ், திருச்சி மண்டல தலைமைப் பொறியாளர் ஆர்.தயாளகுமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் விவசாய பெருங்குடி மக்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### காவிரி டெல்டா பாசனத்திற்கு

# முதல்வர் மு.க.ஸ்டாலின் - கல்லணையில் தண்ணீரை திறந்து வைத்தார்!

## 13 லட்சம் ஏக்கர் பரப்பு பாசன வசதி பெறும்!

**தஞ்சை,ஜூன் 17-**

**முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.6.2025) தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் வட்டம், கல்லணையிலிருந்து காவிரி டெல்டா விவசாயிகளின் நலன் கருதி, குறுவை சாகுபடிக்காக தண்ணீரை திறந்து வைத்தார்.**

காவிரி டெல்டா மாவட்டங்களுக்கு பாசனத்திற்காக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 12.6.2025 அன்று மேட்டூர் அணையிலிருந்து திறந்துவிடப்பட்ட தண்ணீர் கல்லணை வந்தடைந்ததை தொடர்ந்து, கல்லணையிலிருந்து காவிரி டெல்டா மாவட்டங்களுக்கு பாசனத்திற்காக காவிரி, வெண்ணாறு, கல்லணைக்கால்வாய் மற்றும் கொள்ளிடம் ஆறுகளில் திறந்துவிடப்பட்டது.

தற்போது அனைத்து உப ஆறுகளிலும் விவசாயப் பணிகள் தொடங்கப்பட்டு வருகிறது. கல்லணையில், காவிரி ஆற்றிலிருந்து வினாடிக்கு 1500 கனஅடி நீர், வெண்ணாறு ஆற்றிலிருந்து வினாடிக்கு 1500 கனஅடி நீர், கல்லணைக் கால்வாயிலிருந்து வினாடிக்கு 500 கனஅடி நீர், கொள்ளிடம் ஆற்றிலிருந்து வினாடிக்கு 400 கனஅடி நீர்பங்கீடு செய்யப்படுகிறது. மேலும் கூடுதலாக கிடைக்க உள்ள தண்ணீரை தேவைக்கேற்ப அனைத்து ஆறுகளிலும் வழங்கப்படும்.

நடப்பாண்டில் (2025-2026) மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா மாவட்டங்களான சேலம், நாமக்கல், ஈரோடு, கரூர், திருச்சி, அரியலூர், பெரம்பலூர், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை மற்றும் புதுக்கோட்டை ஆகியவற்றிலுள்ள ஆறுகள், வாய்க்கால்கள் மற்றும் வடிகால்களில் 98.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சுமார் 5021.74 கி.மீ நீளத்திற்கு, திட்ட நிதியின் கீழ் சிறப்பு தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, நிறைவு பெற்றுள்ளது.

மேலும், கல்லணை தலைப்பில் திறந்து விடப்பட்ட தண்ணீர் காவிரி, வெண்ணாறு மற்றும் கல்லணைக் கால்வாய்களின் கடைமடைப் பகுதிகளுக்கு விரைந்து செல்ல நடவடிக்கை எடுக்க தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கினார்கள்.

கல்லணையிலிருந்து தற்போது தண்ணீர் திறந்து விடப்படுவதால் தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை மற்றும் கடலூர் மாவட்டங்களில் குறுவை சாகுபடி செய்யவும், சம்பா சாகுபடிக்கான தொடக்கப்பணிகளை செய்யவும், சுமார் 13.00 இலட்சம் ஏக்கர் பரப்பு பாசன வசதி பெறவுள்ளது.

மேட்டூர் அணையின் நீர் இருப்பு மற்றும் நீர்வரத்து, எதிர்நோக்கும் மழை, மேலும் கர்நாடகாவிலிருந்து நமக்கு கிடைக்க வேண்டிய நீரின் அளவு ஆகியவற்றை கருத்தில் கொண்டு, காவிரி டெல்டா பாசன பகுதி களுக்கு தேவைக்கேற்ப பகிர்ந்தளிக்கப்படும். மேட்டூர் அணையில் நீர் இருப்பின் அடிப்படையில் முறை பாசனம் நடைமுறைப்படுத்தப்படும்.

பாசனத்திற்கு வழங்கப்படும் நீரினை சிக்கனமாகவும், தேவைக்கேற்பவும் பயன்படுத்தி அதிக மகசூல் பெற விவசாய பெருங்குடிமக்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டார்.

**மாவட்ட ஆட்சியர்களுடன் முதல்வர் ஆலோசனை!**

முன்னதாக, முதலமைச்சர் அவர்கள், கல்லணை சுற்றுலா மாளிகையில், தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி பிரியங்கா பங்கஜம், திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் வ. மோகனச்சந்திரன், திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் மா. பிரதீப் குமார், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் ஹெச்.எஸ். ஸ்ரீகாந்த், நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவர் ப. ஆகாஷ், புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. மு. அருணா, ஆகிய மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் ஆய்வு நடத்தியபோது, டெல்டா பகுதிகளில் தூர்வாரப்பட்டதன் விவரங்கள் குறித்தும், சாகுபடி விவரங்கள் குறித்தும் கேட்டறிந்தார். மேலும், தேவைக்கேற்ப நெல் கொள்முதல் நிலையங்கள் திறந்திடவும், விவசாய இடுபொருட்களான உரங்கள், விதைகள் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகள் போன்றவை தேவையான அளவு இருப்பதை உறுதி செய்திடவும் அறிவுறுத்தினார்.

**விவசாய சங்கங்களின் பிரதிநிதிகளுடன் சந்திப்பு!**

அதனைத் தொடர்ந்து, முதலமைச்சர் அவர்களை, மேற்காணும் டெல்டா பகுதி விவசாயிகள், விவசாயிகள் சங்க பிரதிநிதிகள் சந்தித்து, மேட்டூர் மற்றும் கல்லணையிலிருந்து சாகுபடிக்கு குறித்த காலத்தில் தண்ணீரை திறந்து வைத்ததற்கு நன்றி தெரிவித்துக்கொண்டு, தங்களது கோரிக்கைகள் குறித்த மனுவையும் அளித்தனர்.

இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, இயற்கை வளங்கள் துறை அமைச்சர், எஸ்.ரகுபதி, போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர், எஸ்.எஸ். சிவசங்கர், உயர் கல்வித் துறை அமைச்சர் கோவி.செழியன், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ்பொய்யாமொழி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர், சிவ. வீ. மெய்யநாதன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர்.பாலு, கல்யாணசுந்தரம், எஸ்.முரசொலி, தில்லி சிறப்புப் பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், சட்டமன்ற உறுப்பினர்கள், நீர்வளத்துறை அரசு செயலாளர் ஜெ.ஜெயகாந்தன் நீர்வளத்துறை முதன்மை தலைமைப்பொறியாளர் (ம) தலைமைப்பொறியாளர், பொது ச.ரமேஷ், திருச்சி மண்டல தலைமைப் பொறியாளர் ஆர்.தயாளகுமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் விவசாய பெருங்குடி மக்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### சொல் புதிது, மாணவர் அகராதி திட்டங்கள் செயல்படுத்தப்படும்!

# ரூ.2 கோடி வழங்கிய முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி!

### ஒன்றிய முன்னாள் அமைச்சர் ப.சிதம்பரம், முனைவர் ம.ராசேந்திரன் தலைமையில் நடைபெற்ற தமிழ் வளர்ச்சிக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்!

**சென்னை, ஜூன் 17 -**

**சொல் புதிது, மாணவர் அகராதி போன்ற பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளதாக தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பொதுக்குழு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

தமிழ் வளர்ச்சிக்கழகத்தின் ஆண்டு பொதுக்குழு கூட்டம் அதன் தலைவர் ம.ராசேந்திரன் தலைமையில் சென்னையில் சனிக்கிழமை நடைபெற்றது. இதே போன்று கழகத்தின் அறங்காவல் குழுவின் கூட்டம் முன்னாள் ஒன்றிய அமைச்சர் ப.சிதம்பரம் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டங்களில் தமிழ் வளர்ச்சிக் கழகப் பணிகள் தொய்வின்றித் தொாதடர ரூ.2 கோடி வழங்கிய முதல்வருக்கு நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேலும், பத்மபூஷண் விருது பெற்ற தொழிலதிபர் நல்லி குப்புசாமிக்கு வாழ்த்தும், புரவலர்களாக முன்வந்திருக்கும் முஸ்தபா, செளரிராசன், ஆர்.ஜி.சந்திரமோகன், சிவாலயம் ஜெமோகன் ஆகியோருக்கு நன்றியும் தெரிவிக்கப்பட்டது.

தமிழ்ச் சிந்தனைக் களஞ்சியம், உலகத் தமிழியல் நூற்களஞ்சியம், நாடகவியல் கலைச்சொற்களஞ்சியம், மாணவர் அகராதி, சொல் புதிது, தமிழியல் களஞ்சியம், கலைக்களஞ்சிய மேம்படுத்திய பதிப்புத் திட்டம் உள்ளிட்ட மொத்தம் ரூ.22 லட்சத்தில் பல புதிய திட்டங்களை மேற்கொள்ள தமிழ் வளர்ச்சிக்கழகம் திட்டமிட்டுள்ளது.

இந்தக்கூட்டத்தில் முஸ்தபா, கிருஷ்ணசந்த் சோர்டியா, நல்லி குப்புசாமி செட்டி, மருத்துவர் ஜே.ராஜமூர்த்தி, ஜெகத்கஸ்பர், சாரதா நம்பியாரூரன், தமிழ்நாடு அறக்கட்டளைத் தலைவர் இராசரத்தினம், சட்டக்கதிர் வி.ஆர்.எஸ்.சம்பத், திருப்பூர் கிருஷ்ணன், முன்னாள் துணைவேந்தர் காளிராஜ், சிவாலயம் மோகன், பேராசிரியர்கள் வ.ஜெயதேவன், மு.இராமசாமி, ய.மணிகண்டன், பா.ரா.சுப்பிரமணியன், அறவேந்தன், திலகவதி, சரவணன், எழுத்தாளர் தமிழ்மகன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.




தஞ்சாவூர் மாவட்டத்தில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் போக்குவரத்துத் துறை சார்பில் புதிய விரிவான மினி பஸ் திட்டத்தை தொடங்கி வைத்ததை தொடர்ந்து, நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி, தூத்துக்குடி புதிய பேருந்து நிலையத்தில் நடைபெற்ற அரசு விழாவில் கலந்து கொண்டு 27 புதிய வழித்தடங்களில் மினி பஸ் சேவையை கொடியசைத்து தொடங்கி வைத்தார். உடன் அமைச்சர்கள் பெ.கீதாஜீவன், அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், சட்டமன்ற உறுப்பினர் எம்.சி.சண்முகையா, மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, மாவட்ட ஆட்சியர் இளம் பகவத், மாநகராட்சி ஆணையர் மதுபாலன், துணை மேயர் ஜெனிட்டா செல்வராஜ், மாநகரச் செயலாளர் ஆனந்த சேகரன், மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் எஸ்.ஆர். எஸ்.உமரி சங்கர், இளைஞரணி அமைப்பாளர்கள் பை.மூ.ராமஜெயம், மதியழகன் பகுதிச் செயலாளர் ரவீந்திரன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.